உ

கடவுள் துணை

செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-ருக.] மன்மத-௵—ஆடி-௴ [பகுதி-கூ

Vol. 51. July-August—1955. No. 9.

உள்ளுறை

சிலப்பதிகாரமும் இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகளும்: 257
ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை

திருவக்கரை: 267
டாக்டர் மா. இராசமாணிக்கனார்

பறவைகளின் இல்வாழ்வு: 272
சாமுவேல் ஆபிரகாம்

இயேசுவின் சாயல்: 285
கி. பழநியப்பன்

மதிப்புரை: 287

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிருவாகசபைத் தீர்மானங்கள் 288

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1955

—

"செந்தமிழ்" ஆசிரியர் குழு:

1. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை
தியாகராசர் கல்லூரி, மதுரை. (தலைவர்)

2. திரு. பேராசிரியர், செக்காவலர், ஆ. கார்மேகக்கோனுர், மதுரை.

3. டாக்டர். மா. இராசமாணிக்கனுர் M. A. M. O. L. L. T Ph. D.
தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

4. திரு. பேராசிரியர், பி. ஜோதிமுத்து M. A., B. D.
தமிழ்த்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

5. திரு. நா. அப்பனையங்கார், ஆசிரியர், தமிழ்ச் சங்கம், மதுரை.

6. திரு. முகம்மது சுல்தான் அவர்கள், M. A. B. L.
வழக்குரைஞர்-மதுரை.

7. திரு. வி சண்முகசுந்தரம் அவர்கள், M. A. B. L.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம்,
அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

8. திரு. கி. பழநியப்பன் அவர்கள்.
தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம், மதுரை.

உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி-௫௧.] மன்மத-வரு—ஆடி-மீ [பகுதி-௯

Vol. 51. July-August—1955. No. 9.

சிலப்பதிகாரமும் இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகளும்*

சித்தாந்த கலாநிதி பேராசிரியர், ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை, மதுரை.

இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகள் என்பது, இயற்கையுலகில் காணப்படாத தெய்வ தெய்விக நிகழ்ச்சிகளைக் குறிப்பதாகும். தெய்வங்களின் செய்கைகளும் தெய்வச் சார்பான நிகழ்ச்சிகளும் மக்கள் வாழ்வில் நேரில் காணப்படாமல் இயற்கை வாழ்வுக்கு அப்பாற்பட்டு நின்று தொடர்பு பெறுவது பற்றி அவை இயற்கைக்கு அப்பாற் பட்டவை யெனக் கருதப்படுகின்றன. இந்த நிகழ்ச்சிகள் மக்கள் வாழ்விலே நேரில் காணப்படவில்லை யாயினும், நமது இலக்கியங்களில் தொடர்பு படுத்திப் புலவர் பெருமக்களால் காட்டப்படுவதை நாம் நாளும் பார்க்கிறோம். இந்த வழக்கம் நமது தமிழ் நூல்களில் சங்க காலத்தை யடுத்துத் தோன்றிய சிலப்பதிகாரக் காலம் முதல் இந்த இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நின்றுபோன தலபுராணக் காலம் வரை நம்மிடையே இருந்திருக்கின்றது. இப்படியே இது மேனாடுகளிலும் சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில் புலவர்கள் எழுதிய இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது. ஆகவே,

*18—8—53-ல் திருச்சி வானொலியிற் பேசியது.

இலக்கியங்களில் தெய்வ, தெய்விகமான இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகள் வந்து தொடர்பு பெறுவது நம் நாட்டு இலக்கியங்களில் தான் உண்டு என்று கருதுவதற்கில்லை. எல்லா நாடுகளிலும் பழங் கால இலக்கியங்கள் எல்லாவற்றிற்குமுள்ள பொதுப் பண்பு என அறிதல் வேண்டும்.

இயற்கை வரம்பு கடவாது உலகியல் எல்லைக்குள்ளேயே இயங் கியது சங்க இலக்கியம்; அதற்குப் பின்புதான் சிலப்பதிகாரம் தோன் றியது. அப்போது மக்கள் வாழ்க்கையில் தெய்வ தெய்விக நிகழ்ச்சி களை இயைத்துப் பாடும் இலக்கியநெறி வேரூன்றி இருந்தது. யாரால் அந்த நெறி நம் தமிழகத்திற் புகுத்தப்பட்டது என்பது ஆராய்ச்சிக்கு இன்னும் அகப்படவில்லை.

இயற்கை வரம்புக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகளை மக்கள் வாழ்க் கையுடன் இணைத்து நோக்கும் மரபு, தமிழிலக்கியங்களுள் சிலப்பதி காரத்திற்றான் முதன்முதலாக இளங்கோவடிகளால் கையாளவும் படு கின்றது.

நூலின் தொடக்கத்தேயே சிலப்பதிகாரத் தலைமக்களான கோவ லன் கண்ணகி என்பவருடைய புகார் நகரத்தைக் கூறப்புகுந்த அடி கள், இயற்கையுலகில் எங்கும் காணப்படாத சுவர்க்கலோகம் பவண லோகம் என்ற உலகங்களின் தலைநகரங்களை எடுத்துச் சொல்லி, அவற்றின்கண் நிலையாக இருக்கும் போகமும் புகழும் புகார் நகரத்தி லும் உண்டு என்பாராய்,

நாகநீள் நகரொடு நாகநா டதனொடு
போகம் நீள்புகழ் மன்னும் புகார்நகர்

என்று புகழ்ந்துரைக்கின்றார்.

கோவலனும் கண்ணகியும் மணம் புரிந்துகொண்டு வாழ்க்கையில் இன்புற்றிருந்த திறத்தைக் கூறுமிடத்துத் தவம் செய்தவர்கள் மறு மையில் உத்தரகுரு என்னும் மேலுலகம் அடைந்து இன்புற்றிருப் பது போல,

"அத்தகு திருவின் அருந்தவம் முடித்தோர்
உத்தர குருவின் ஒப்பத் தோன்றிய
கயன்மலர்க் கண்ணியும் காதல் கொழுநனும்
மயன்விதித் தன்ன மணிக்கால் அமளிமிசை
நெடுநிலா மாடத்து இடைநிலத்து இருந்தனர்"

என்று உரைக்கின்றார்.

இங்கேயும் கோவலன் கண்ணகியுடன் வீற்றிருந்த கட்டிலைக் கூறும்போது மயன் என்னும் தெய்வலோகத்துத் தச்சன் செய்தது போன்ற கட்டில் என இயற்கை யுலகுக்கு அகப்படாத தெய்வீகப் பொருளையே புகுத்துகின்றார்.

இனி, சிலப்பதிகாரத் தலைமக்களுள் மாதவியும் ஒருத்தி. அவளை நமக்குத் தெரிவிக்கப்புகும் சேரர் இளங்கோ அவள் மண்ணுலக மக்களினத்து நாடக மகளே யாயினும், தெய்வ உலகத்து இந்திரன் அவைக்களத்து நாடக மகளான உருப்பசி (ஊர்வசி) யின் வழிவந்தவள் என்றும், அவளுக்குரிய தலைக்கோல் எனப்படும் மூங்கிற்கோல், இந்திரன் மகனான சயந்தன் சாபத்தாற் பெற்ற வடிவமென்றும், உருப்பசிக்கு மாதவி யென்ற பெயருண்டாகையால் அவள் வழிவந்த மாதவிக்கும் அது பெயராயிற்று என்றும் உரைப்பாராய்,

"தெய்வ மால்வரைத் திருமுனி யருள
எய்திய சாபத்து இந்திர சிறுவனொடு
தலைக்கோல் தானத்துச் சாபம் நீங்கிய
மலைப்பரும் சிறப்பின் வானவர் மகளிர்
சிறப்பிற் குன்றாச் செய்கையொடு பொருந்திய
பிறப்பிற் குன்றாப் பெருந்தோள் மடந்தை
தாதவிழ் புரிகுழல் மாதவி"

என்று எடுத்துரைக்கின்றார்.

இப்படி, காப்பியத் தலைமக்கள் மண்ணில் வாழும் மக்களாகவும், அவர்களுடைய பிறப்பு, இயல்பு முதலிய பண்பாடுகளை விளக்குதற்கு மண்ணுலக இயற்கைக்கு அப்பாலுள்ள தெய்வங்களைக் கொணர்ந்து இயைபுபடுத்தும் முறையினை இளங்கோவடிகள் மேற்கொள்வதைக் காணலாம்.

கண்ணகியுடன் கடிமனை இருந்து அறம் புரிந்துவந்த கோவலன் மாதவியின் நட்புப்பெற்றுக் கண்ணகியைப் பிரிந்து, அம் மாதவி மனையிலே பன்னாள் இருந்து பின்பு பாட்டிடைத் தோன்றிய கருத்து வேறுபாட்டால் அவளைக் கைவிட்டுக், கண்ணகியிடம் திரும்பிவந்து அவளைத்தன்னுடன் அழைத்துக்கொண்டு மதுரை நோக்கிச்செல்வதும், வழியில் கவுந்தியடிகளின் துணை கிடைக்கப் பெறுவதும், மூவரும் காவிரியின் வடகரைவழியாகச் சென்று திருவரங்கத்துக்கு அண்மையில் ஆற்றைக்கடந்து, தென்கரையிலுள்ள உறையூர்ப் புறத்தை அடைவதும் புகார்க்காண்டம் என்னும் முதற்பகுதியில் காணப்படும் வரலாறாகும்.

இந் நிகழ்ச்சிகளுள் கோவலன் மாதவி மனையில் இருந்துவருகையில் புகார் நகரத்தவர் இந்திரவிழாக் கொண்டாடுகின்றனர். அவ் விழாவில் நகரத்துமக்கள் காவற்பூதம் இருக்கும் கோயிலுக்குச்சென்று வழிபாடுசெய்து விழாவைத் தொடங்குகின்றார்கள். அந் நிலையில் சோழவேந்தனைக் காத்தற்பொருட்டுத் தெய்வவுலகத்து இந்திரன் ஏவ அப் பூதம் புகார்நகரத்துக்கு வந்துள்ளது என்பாராய்,

"வெற்றிவேல் மன்னற்கு உற்றதை யொழிக்கெனத்
தேவர் கோமான் ஏவலிற் போந்த
காவற் பூதம்"

என்று அதன் வரலாற்றைக் கூறுகின்றார்.

அவ்வாறே அந் நகர்க்கண் உள்ள வெள்ளிடைமன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல்மன்றம், பூத சதுக்கம், பாவைமன்றம் ஆகிய ஐவகை மன்றங்களும் சோழவேந்தன் இந்திரனுக்கு உண்டான இடுக்கண்களை நீக்கியதற்குக் கைம்மாறாக அவன்தர வந்தவை என்பது தோன்ற,

"அமரா பதிகாத்து அமரனிற் பெற்றுத்
தமரின் தந்து தகைசால் சிறப்பின்
பொய்வகை யின்றிப் பூமியிற் புணர்த்த
ஐவகை மன்றம்"

என அறிவிக்கின்றார்.

மாதவிமனையில் கோவலன் மடங்கியிருக்கையில் கண்ணகிக்குப் பணிபுரியும் அடித் தோழியின் வேறாகத் தேவந்தி யென்பவள் ஒரு தோழியாக வந்து சேர்கின்றாள். இறந்த குழந்தை யொன்றின் உடலுக்குள் புகுந்து வளர்ந்த பாசண்டச் சாத்தன் என்னும் தெய்வத்துக்கு அவள் மனைவி யென்றும், சின்னாட்குப்பின் பாசண்டச் சாத்தன் மறைந்துவிட, அவள் சாத்தன் கோயிலிலே வழிபாடு செய்து வந்தாள் என்றும் தேவந்தியின் வரலாறு குறிக்கப்படுகின்றது.

கவுந்தியடிகளும் கோவலனும் கண்ணகியும் காவிரியாற்றைக் கடந்து தென்கரை நோக்கி வருகையில் ஆற்றிடையுள்ள தீவில் அருகன்நெறிநிற்கும் சாவகர் இட்ட சிலாதலத்தில் தேவசாரணர் தோன்றி அருகபரமேட்டியின் புகழ்பாடிக் கற்றலத்தின்மேல் ஒரு முழ உயரத்தில் அந்தரமாய் நின்று, 'பவந்தரு பாசம் கவுந்தி கெடுக' எனச் சொல்லிவிட்டு மறைகின்றனர். பின்னர் மூவரும் உறையூரை நோக்கி வருகையில் வம்பப் பரத்தை யொருத்தியும் வறுமொழியாளன் ஒருவனும் அவர்களை நேர்பட்டுக் குறும்புபேசக் கேட்ட கவுந்தியடிகள் சினந்து,

> "எள்ளுநர் போலும் என்பூங் கோதையை
> முள்ளுடைக் காட்டில் முதுநரி யாக"

எனச் சாபமிடுகின்றனர்.

கோவலன் கண்ணகியாகிய இருவர் வேண்டுகோட்கும் இசைந்து இப் பரத்தையும் இவனும்

> "உறையூர் நொச்சி யொருபுடை யொதுங்கிப்
> பன்னிரு மதியம் படர்நோய் உழந்தபின்
> முன்னை யுருவம் பெறுக ஈங்கிவர்"

எனச் சாபவிடை அருளுகின்றார் கவுந்தியடிகள்.

பின்பு கோவலன் முதலிய யாவரும் உறையூர்ப் புறத்தே தங்கியிருந்து விடியலில் எழுந்து மதுரை நோக்கிச் செல்கின்றார்கள். இதனோடு புகார்க்காண்டம் முடிகிறது. இதன்கண் கோவலன் மாதவி

ணைப் பிரிந்து கண்ணகியொடு கூடிக் கவுந்தியடிகளுடன் சோழ நாடு கடந்து மதுரைநோக்கிச் செல்லும் செய்தியே கூறப்படுகின்றது. இடையிடையே கூறப்படும் மாதவியின் பிறப்பு வரலாறும் தேவந்தியின் கணவனான பாசண்டச்சாத்தன் வரலாறும், காவற்பூதம், ஐவகை மன்றம் அருகசாரணர் வரவும், வம்பப்பரத்தையும் வறுமொழியாளனும் குறுநரியாகிய குறிப்பும் இயற்கை வரம்புக்கு மேற்பட்ட தெய்விக நிகழ்ச்சிகளே; ஆயினும் அவற்றால் காப்பிய வரலாறு ஒரு சிறு மாற்றமோ சிறப்போ அடைகிறதில்லை. ஒவ்வொன்றும் தனித்தனியே சார்ந்த பொருட்குள்ள தெய்விகத் தொடர்பைக் காட்டுவதைத் தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை.

இவ்வாறே மதுரைக் காண்டத்திற்குச் சென்றால் வழியில் மாங்காட்டு மறையோன் ஒருவன் வந்து திருவரங்கத்துத் திருமாலின் கிடந்த வண்ணமும் திருவேங்கடத்தில் அவரது நின்ற வண்ணமும் தெரிவித்து, கோவலன் முதலிய மூவர்க்கும் மதுரைக்குச் செல்லும் வழியைக் கூறுகின்றான். அவன் கூற்றில் பாண்டி வேந்தருள் ஒருவன் இந்திரனுடைய ஆரத்தை வாங்கி யணிந்ததும், ஒரு பாண்டியன் மழை பெய்யாது மறுத்த மழை மேகத்தைப் பிணித்துத் தன் பாண்டி நாட்டிலே மழை பெய்வித்துக் கொண்டதுமாகிய இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகள் தோன்றிப் பாண்டியர் பெருமை விளக்குவது காண்கிறோம். அவற்றால் காப்பிய நிகழ்ச்சி ஒருவகைக் கிளர்ச்சியும் விருவிருப்பும் எய்தவில்லை. மேலும் அம் மறையோன் மதுரை செல்வதற்கு மூன்றுவழிகள் காட்டி ஒவ்வொன்றின் இயல்பையும் கூறுகின்றான். அவற்றுள் ஒன்று சிறுமலையைக் கடந்து திருமால் வீற்றிருக்கும் குன்றத்திற்குக் கொண்டு செல்லும்; அக் குன்றத்தருகேயுள்ள பிலத்தில் புண்ணிய சரவணம், பவகாரணி, இட்டசித்தி என்ற மூன்று பொய்கைகள் உண்டு. அவற்றுள் மூழ்கிய வர்கட்குப் புண்ணிய சரவணம் இந்திரன் உரைத்த ஐந்திர வியாகரணத்தை ஒருவர் அறிவியாமலே அறியச்செய்யும்;பவகாரணி பழம்பிறப்பை

அறிவிக்கும்; இட்டசித்தி வேண்டிய சித்திகளை நல்கும். மேலும், அக் குன்றத்திற்கு அருகே ஓடும் சிலம்பாற்றையும், வரோத்தமை யென்னும் தெய்வமங்கை வரலாற்றையும் அம் மறையோன் மொழிகின்றான். வேறொருவழி வேறொரு தெய்வமடந்தையைக் காட்டுகின்றது. அவளால் வழிச்செல்வோர்க்கு யாதொரு இடையூறும் இல்லை. அதனை யடுத்துச் செல்லும் மூன்றாவதுவழியே மதுரைக்குச் செல்லும் பெருவழி யென்று பேசுகின்றான். இப் பேச்சில் காணப்படும் தெய்வ தெய்விகப் பகுதிகள் காப்பிய நிகழ்ச்சிக்குச் சிறிய துணையாகாவிடினும், காவிரிநாட்டு உறையூருக்கும், பாண்டிநாட்டு மதுரைக்கும் இடையில் உள்ள கொடும்பாளூர், சிறுமலை, சிலம்பாறு எனவரும் ஊர்; மலை, ஆறுகளைக் காட்டும் வகையில் உதவிசெய்கின்றன.

கோவலன் முதலிய மூவரும் மதுரைப் பெருவழியே சென்று கொண்டிருக்கையில் நீர்பருகுவதற்கு ஒரு பொய்கையை நோக்கிக் கோவலன் தனித்துச் சென்றபோது, வனசாரிணி என்னும் தெய்வம் மாதவியின் தோழியான வயந்தமாலை வடிவில் தோன்றிக் கோவலன் முன் கண்ணீர் சொரிந்து அவன் காலில் வீழ்ந்து, மாதவி தன்பால் குற்றம் காட்டித் தன்னை வெளியே போக்கிவிட்டதாகச் சொல்லி,

> "தனியுற்று என்னையும் துறந்தன ளாதலின்
> (நீ)மதுரை மூதூர் மாநகர் போந்தது
> எதிர்வழிப் பட்டோர் எனக்குஆங் குரைப்பச்
> சாத்தொடு போந்து தனித்துய ருழந்தேன்"

என்று மொழிந்து நின்றது.

அதுகண்ட கோவலன், இவள்தான் அந்த மாங்காட்டு மறையோன் உரைத்த மயக்கும் தெய்வம்போலும் என நினைந்து மனதில் பாய்கலைப்பாவை மந்திரத்தை வழுத்தினான். உடனே அத் தெய்வம் அஞ்சி,

> "வனசா ரிணியான் மயக்கம் செய்தேன்
> புனமயில் சாயற்கும் புண்ணிய முதல்விக்கும்
> என்திறம் யாதும் உரையாது ஏகுக"

என்று வேண்டிக்கொண்டு போகிறது.

இந்தத் தெய்வ நிகழ்ச்சி காப்பிய நிகழ்ச்சியோடு நெருங்கிய தொடர்பு கொள்ளாது ஒழியினும் கோவலனுக்கு எதிர்காலத்தில் தீங்கு நேர்தற்கு ஏற்ற ஊழ்வினை உருத்து வந்துகொண்டிருக்கின்றது என்ற குறிப்பைக் காப்பியத்தைப் படிக்கும் நமக்குக் காட்டுகின்றது. கோவலன் முதலியோர் மதுரைநகர்ப் புறஞ்சேரி யடைந்து அங்குள்ள பொழிலிடம் ஒன்றில் தங்கினர்; கோவலன் மட்டில் நகர்க்குட் புகுந்து வேந்தன் கொற்றமும் மதுரைநகர் மாண்பும் அறிந்துவந்து கூறுகின்றான். அப்போது, அங்கே மாடலன் என்னும் மறையவன் வந்து கோவலனைக் கண்டு அளவளாவுகின்றான். அவன், கோவலன் புகார்நகரத்தில் இருக்கையில் செய்த நல்வினைகளை எடுத்தோதி,

"இம்மைச் செய்தன யான்அறி நல்வினை
உம்மைப் பயன்கொல் ஒருதனி உழந்துஇத்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது"

என்று ஆற்றுவிக்கின்றான்.

அவ் வுரையாட்டில் கோவலன் மாதவிவயிற்றில் தனக்குப் பிறந்த மகள் மணிமேகலைக்குப் பெயரிட்ட வரலாறும், பொய்ச் சான்று கூறிப் பூதத்தின்பாசத்திற்பட்ட ஒருவன்பொருட்டுக் கோவலன் தன் னுயிரைக் கொடுக்க முற்பட்டதும் அதற்கு அப்பூதம்,

"நரகன் உயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பரகதி யிழக்கும் பண்பு ஈங்கில்லை ஒழிக"

என உரைத்ததும் மதுரையில் கொலையுண்டு இறக்கவிருக்கும் கோவலன் பால் நம் உள்ளத்தில் நன்மதிப்பும் இரக்கமும் உண்டாகச் செய்கின்றன.

மாதவிபால் கண்ணகியை அடைக்கலப் படுத்துங்கால் கவுந்தி யடிகள் கூறும் சாயலன் மனைவி வரலாறும் கருங்குரங்காயிருந்து தேவனாகிய வானவன் வரலாறும் மாதரியின் உள்ளத்தில் வியப்பை விளைவித்துக் கவுந்தியின் உரைக்கு ஏற்றதொரு எடுத்துக் காட்டாய் நிற்பதையன்றி வேறு காப்பியப் பயனின்றி நிற்கின்றன.

ஆய்ச்சியர் சேரியிலிருந்த கண்ணகிக்குக் கோவலன் கொலையுண்ட செய்தி தெரிந்ததும், எழுந்த ஆத்திரத்தால் வானத்தில் விளங்கிய சூரியனை நோக்கி,

"பாய்திரை வேலிப் படுபொருள் நீஅறிதி
காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என்கணவன்"

என்று வினவுவதும்,

"கள்வனோ அல்லன் கருங்கயற்கண் மாதராய்
ஒள்ளெரி யுண்ணும் இவ்வூர் என்றது ஒருகுரல்"

என்பதும் இயற்கை வரம்பு மீறினவாயிருப்பினும் கண்ணகியின் வரலாற்றுக்கு விறுவிறுப்பும் படிப்போர் உள்ளத்துக்குக் கிளர்ச்சியும் எழுப்பி அழுகைச் சுவையை வளர்க்கின்றன. இங்கே தோன்றி வளரும் அழுகைச் சுவை, கோவலன் வெட்டுண்டு கிடந்த கொலைக்களம் புகுந்த கண்ணகி கண்டு அவனது,

"பொன்துஞ்சும் மார்பம் பொருந்தத் தழீஇக்கொள்ள
நின்றான் எழுந்து நின்றமதி வாண்முகம்
கன்றியது என்று அவள்கண்ணீர் கையால் மாற்ற"

கண்ணகி கீழே விழுந்து கோவலன் அடிகளைப் பற்றுதலும் அவன் தேவர் பலர் சூழநின்று,

"எழுதெழில் மலருண்கண் இருந்தைக்க எனப்போவது,"

என்ற தெய்விக நிகழ்ச்சியால் நமது உள்ளத்தை உருக்குகின்றது.

இவ்வண்ணமே கண்ணகியார் தனது இடதுமார்பைக் கையால் திருகி எறிந்து தீத்திறத்தார் பக்கமே சென்று எரியுமாறு மதுரை நகரைத் தீக்கிரையாக்குவதும் அதுகண்டு மதுராபதி என்னும் தெய்வம் போந்து, "கேட்டிசின் வாழி நங்கை என்குறை" எனக் கண்ணகியின் பின்னே நின்று கூறத் தனது முகத்தை வலப்புறம் சிறிது திருப்பி,

"யாரைநீ என்னுடன் வருவோய் என்னுடை
ஆரஞர் எவ்வம் அறிதியோ"

என்று கண்ணகியார் கேட்கவும்; அம் மதுராபதி,

"ஆரஞர் எவ்வம் அறிந்தேன் அணியிழாய்
மாபெருங் கூடல் மதுரா பதி என்பேன்
கட்டுரை யாட்டியேன் யான் நின்கணவற்குப்
பட்ட கவற்சியேன் பைந்தொடி சேட்டி."

என்று பன்முறை சொல்லி வேண்டுவதும், பின்பு பாண்டியன் செங்கோற் சிறப்பும் கண்ணகியின் பழம்பிறப்பும் சொல்லி

"உம்மை வினைவந்து உருத்த காலை
செம்மை யிலோர்க்குச் செய்தவம் உதவாது
வாரொலி கூந்தல்நின் மணமகன் தன்னை
ஈரேழ் நாளகத்து எல்லை நீங்கி
வானோர் தங்கள் வடிவி னல்லதை
ஈனோர் வடிவில் காண்டல் இல்லென"

உரைப்பதுமாகிய தெய்வ நிகழ்ச்சிகள் கொலைக்கள நிகழ்ச்சியால் மீதூர்ந்து நின்று நம் நெஞ்சை வருத்தும் அழுகை நிலைக்கு ஆறுதல் தருகின்றன.

முடிவில் செங்குட்டுவன் எடுத்த கண்ணகி கோட்டத்திற்குக் கண்ணகியின் தாயும் அடித்தோழியும் தேவந்தியும் மாதரி மகள் ஐயையும் வந்து கண்ணகியைப் பாராட்டிப் பரவியபோது, காலிற் பொற்சிலம்பும் இடையில் மேகலையும், மார்பில் பொன்னணிகளும் விளங்கக் கண்ணகித் தெய்வம் தோன்றி,

"தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில்
நல்விருந் தாயினன் நான் அவன்தன் மகள்"

என்று சொல்லி ஏனைமகளிரை நோக்கி,

'வென்வேலான் குன்றின்மேல் விளையாட்டு யான்அகலேன்
என்னோடும் தோழிமீர் எல்லீரும் வம்மெல்லாம்"

என்பது இயற்கை வரம்புக்கு மேற்பட்ட தெய்விக நிகழ்ச்சியாயினும் காப்பிய வரலாற்றுக்கு மங்கலமுடிவு தந்து படிக்கின்ற நமது உள்ளம் அமைதியும் பெருமிதமும் கொள்ளச் செய்கின்றது.

திருவக்கரை

திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள், தமிழ்ப் பேராசிரியர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

முன்னுரை

தென்ஆர்க்காடு கோட்டத்திலுள்ள சிவதளிகளுள் திருவக்கரை ஒன்று. இது புதுச்சேரியிலிருந்து பதினெட்டுக் கல் தொலைவிலுள்ளது. இதனைப் பார்க்க வேண்டுவது இன்றியமையாததென்று புதுவைத் தொழிலாளர் இயக்கத் தலைவர் திருவாளர் சுப்பிரமணியம் அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள். நான் அவருடனும் புதுவைக் கல்விக் கழகத் தலைவர், செயலாளர், உறுப்பினர், திரு செல்வத் தொகுப்பாளர் என்பாருடனும் தனி மோட்டார் வண்டியிற் சென்றேன். வண்டி வழியில் இரண்டு சிற்றாறுகளைக் கடந்து ஆற்றங்கரை மீது நின்றது. நாங்கள் ஆற்றைக் கடந்து அக்கரையில் உள்ள திருவக்கரை அடைந்தோம்.

திருவக்கரை மிகச் சிறிய கிராமம். அங்கு நான்கு அல்லது ஐந்து தெருக்களே உண்டு. ஆற்றைக் கடந்து கோவிலையடையும் பாதை நெடுக அழிந்த கற்சிலைகளின் பகுதிகளும், கற்பாறைகளும், கற்சிலைகளும், மரம்போன்ற கற்பாறைகளும் சிதறிக் கிடக்கும் காட்சி, 'திருவக்கரை பழமையும் பெருமையும் பெற்றிருந்த சிவதளி' என்பதை அறிவிப்பதுபோலக் காணப்பட்டது. கோவிலுக்கு முன் குருக்கள் இல்லம் இருக்கிறது. அவர் எங்களை அன்புடன் வரவேற்று எல்லா இடங்களையும் காட்டித் தாம் அறிந்தவரை சில விளக்கங்களைக் கூறினர்.

திருக்கோயில்

இவ்வூரில் உள்ள திருக்கோயில் சம்பந்தப் பெருமான் பாடல் பெற்றது. அதனால் அது கி. பி. 7-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது

என்பதில் ஐயமில்லை. அது ஏனைய சிவதளிகளைப் போலப் பெரிய கோயிலாயிருக்கின்றது. புறச்சுவர்கள் பழுதுபட்ட நிலையில் உள்ளன. பிராகாரங்கள் முட்செடிகள் முளைக்க இடந்தந்துவிட்டன. பிராகாரத்தைச் சுற்றுவோர் கால்களில் முள்தைக்கப் பெறுமல் உட்சென்று மீளுதல் அருமை. கோவிலினுள் நுழைந்தவுடன் இடப்புறம் காளிகோயில் ஒன்று இருக்கின்றது. அதன் எதிரே மிகப் பெரிய உயரமான சிவலிங்கம் கொண்டுள்ள சிறியகோவில் ஒன்று இருக்கின்றது. அதன் எதிரே நூறுகால் மண்டபம் ஒன்றுள்ளது. உட்கோவிலுக்கு வலப்புறம் குண்டலிமா முனிவர் சமாதிக் கோவில் ஒன்றுண்டு. அம்மன்சந்நிதி நூறுகால் மண்டபத்திற்கு எதிரே இருக்கின்றது. உட்கோவிலுக்கு வெளியே சிறுகோவில்கள் சிலஇருக்கின்றன.

கோபுரம்

கோபுரம் ஏறக்குறைய 150 அடிக்கு மேற்பட்டது. அடிப்பகுதி கற்களாலும் கோபுரப்பகுதி முழுவதும் செங்கற்களாலும் ஆனவை. செங்கற்களை மறைத்திருந்த சுண்ணும்பு பெயர்ந்து வீழ்ந்து பலஆண்டுகள் ஆகிவிட்டன. இப்பொழுது செங்கற்களின அடுக்குகளே கோபுரமாகக் காட்சியளிக்கின்றன. ஆதலின், கோபுரத்தில் ஓவிய சிற்பவேலைப்பாடுகளைக்கண்டு களிகூர்தற்கு இடமில்லை. சில நிலைகளில் செங்கற்கட்டிகளாகிய கோபுரப்பகுதிகள் தம் நிலைதவறிச் சரிந்து கீழே விழக்கூடிய நிலையில் இருக்கின்றன. அவற்றைத் தாங்கும்பேறு பெறுவர் யாரோ? அவை எந்தப் பெரியார்மீது விழக் காத்திருக்கின்றனவோ? அறியக்கூடவில்லை.

காளியம்மன் கோவில்

இது பார்க்கத்தக்க ஒன்று. இதற்கு முன்புறம் இரண்டு பெண் சிலைகள் ஓரளவு தரையிற் புதையுண்டு நிற்கின்றன. வேறு இரண்டு. கோவிற்கதவின் இருபக்கங்களிலும் இருக்கின்றன. இவற்றின்

வேலைப்பாடு வியப்புறும்விதம் அமைந்துள்ளது. இவை நான்கும் நான்கு இடைப்பெண்களைக் குறிப்பன என்றும்; இவர்கள் காளியால் தீச்சொல் கூறப்பட்டவர்கள் (சபிக்கப்பட்டவர்கள்) என்றும் குருக்கள் கூறினர்.

கோவிலுக்குள் காளியம்மை நடனம் புரிகின்ற நிலையில் வேலைப்பாடு கொண்ட சிலை ஒன்று காணப்படுகிறது. அதற்கு இருபுறங்களிலும் மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி முதலிய மடந்தையர் எழுவரைக் குறிக்கும் சிலைகள் நிறுத்தப்பட்டுள. அக் காளியம்மை "வக்கிரன்" என்னும் அசுரனை அழித்துக் கொன்றதாக ஒரு கதை உலவுகின்றது.

பெரிய லிங்கம்

காளி கோவிலுக்கு எதிரில் சிறிய கோவில் ஒன்று உண்டு. அதில் உள்ள இலிங்கம் தரையில் இருந்து ஆறடி உயரம் உள்ளது. அது வக்கிராசுரனால் வழிபாடு செய்யப்பட்டதாம். அதன் மேற்பகுதி குடிமல்லத்தில் உள்ள இலிங்கத்தின் மேற்பகுதியை ஓரளவு ஒத்துள்ளது கவனிக்கத்தக்கது அந்த இலிங்கத்திற்கு எதிரேயுள்ள நந்தி பாதியளவு தரையில் புதையுண்டு கிடக்கிறது. இவ்விரண்டிற்கும் இப்போது வழிபாடு செய்வதில்லை.

நூறுகால்மண்டபம்

இது மிகுந்த வேலைப்பாடு அமைந்த மண்டபம். இது ஆட்டங்கண்டு இடிந்து விழும் நிலையில் இருக்கின்றது. இம் மண்டபம் நாற்புறங்களிலும் சக்கரங்களையும் குதிரைகளையும் கொண்டது. தூண்களின் அடிப்பகுதி சிங்கமுகம் பெற்று விளங்குகிறது. தூணுக்கு மேலே உள்ள பலகைகளில் அரைவட்ட வேலைப்பாடு இருத்தல் நோக்கற்பாலது. இவ் வேலைப்பாடுகளுடைய தூண்களைக் கொண்ட கோயில்கள் பழமையானவை என்று ஆராய்ச்சியாளர் அறைவர் இவை பல்லவர் வேலைப்பாடுகளில் பழமையானவையாகும்.

உட்கோவில்

கருவறையின் எதிரில் ஒரு நில அறை இருக்கிறது. அதற்குள் இருந்த இலிங்கமே இன்று அக்கருவறையில் இருப்பது என்று குருக்கள் கூறினர். சிவபிரான் பெயர் மதிமுடியார் (சந்திரமௌளீசுவரர்) மூலலிங்கத்தின் மூன்று முகங்கள் பார்க்கத்தக்கவை. பின்புறத்தில் முகம் இல்லை. வலக்காலைத் தூக்கி ஆடும் நடராசர் சிலை இருக்கிறது. கருவறையின் இடப்புறமிருந்து பார்த்து வருகையில், (1) நால்வர், (2) தட்சிணாமூர்த்தி, (3) சோமாஸ்கந்தர், (4) திருமால், (5) மேலே குடையுடைய பிள்ளையார், (இக்குடை இங்குக் காணப்படல் ஆராய்ச்சிக்குரியது) (6) குண்டலிமாமுனி, (7) அகத்தியர், (8) சண்டேசுவரர், (9) மகிஷாசுரமர்த்தனி (கச்சணிந்த கனதனத்தாள்) இவர்தம் உருவச்சிலைகள் சிறப்புற விளங்குகின்றன. எல்லாத் தூண்களிலும் அழகிய உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் நடனம், இசை இவற்றிற் பங்குகொண்டுள்ளமை, பழந்தமிழர் நடனக்கலையையும் இசைக்கலையையும் நமக்கு அறிவித்தலைக்குவனபோல் காணப்படுகின்றன. வெளித் தூண்களில் எல்லாம் உடற்பயிற்சிக்குரிய பலவகை விளையாட்டுகள், மாடுகளை ஏறி அடக்கல், ஒரே தட்டின்மீது நால்வர் நிற்றல் முதலியன செதுக்கப்பட்டுள்ளன. இவற்றால், பழந்தமிழர் உடற்பயிற்சி முறைகளில் கொண்டிருந்த கவலை நன்கு வெளியாகிறது. திருமுழுக்கு (அபிடேகம்) மண்டபத்திற்கும் துவாரபாலகர் இருத்தல் வியக்கத்தக்கது. இந்நிலை வேறு எங்கும் காண்டல் அருமை.

குண்டலிமாமுனிவர் சமாதி

இது சிறிய கோவில்; இதன் கற்கள் சரிந்து விழுந்து கிடக்கின்றன. இதன் வெளிச்சுவர்கள்மீது கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இதன் மேற்கூறை செங்கற்களால் ஆனது. இது சமாதியைக் குறிக்கவே இவ்வாறு கட்டப்பட்டதென்பது குருக்கள் கருத்து.

கருவறையில் இலிங்கம் காணப்படுகிறது. அது வக்கிரன் வழிபட்ட லிங்கம்போன்ற வடிவினது; ஆயின் சிறியது. கோபுரத்தின் மீது செடி வளர்ந்திருக்கிறது; பலவெடிப்புகள் உண்டாகியுள்ளன.

வரதராஜப்பெருமாள்கோவில்

இது ஒரு சிறு கோவில். இதில் உள்ள பெருமாள் சிலை நின்ற கோலத்தில் இருக்கிறது. இக் கோவில் மேற்குப் பார்த்திருக்கிறது. இதனுள் ஒருவீரன் கையில் வில்லும் அம்பும் கொண்டு இருப்பதாகச் சிலைஒன்று இருக்கிறது. அவனுக்கு இருபுறமும் இரண்டு பெண்கள் நிற்கின்றனர். அவ் வீரன் அரசனாகவும், இரு பெண்கள் அவன் மாதேவியராகவும் இருக்கலாம். பெருமாள் வலது கையில் இருப்பது பிரயோக சக்கிரம் என்பது கவனிக்கத்தக்கது.

ஆயிரம் லிங்கம்

ஆயிரலிங்கங்கள் காணத்தக்கவை. இவை மிகச் சில கோவில்களிற்றும் காணக்கிடப்பவை.

முருகன் கோவில்

இங்கு முருகப்பெருமான் ஒரே மனைவியாருடன் கோவில் கொண்டுள்ளதாகத் தெரிகிறது. இப் பெருமான் அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப்பெற்றவர்.

அம்மன் கோவில்

அம்மன் பெயர் அமுதாம்பிகை என்பது. இக் கோவில் மண்டபத் தூண்களில் எல்லாம் பலவகை நடனவகைகள் வியக்கும் வகையில் விளக்கப்பட்டுள்ளன. இரண்டுபெண்கள் சக்கரம்போலப் படுத்த நிலையில் நடனமாடுதல், மேல்நாட்டார் கூறும் 'பின்ஸ்' நடனம்போல் முழங்கால்களை மடக்கிக் கைகோத்து நடித்தல், வலக்காலைத் தூக்கியபடி நடித்தல், இடக்காலைத் தூக்கியபடி நடித்தல், இங்ஙனம் இரண்டு பெண்கள் கைகோத்து நடித்தல் முதலிய பலவகை நடன

வகைகள் காணப்படுகின்றன. இந்நாடிகமாதர் இக்காலத்தில் 'கௌன்' போன்ற உடை அணிந்துள்ளனர். ஆடவர் சட்டை சல்லடம் அணிந்துள்ளனர்.

சுருக்கக்கூறின், திருவக்கரை சிறந்த சிற்பக்கூடம் என்னலாம்; பண்டைக்காலத் தமிழர் நடனக்கலையை நாட்டுக்கு உணர்த்தும் நடனக் கலைக்கூடம் என்னலாம்; பக்திக்குப் பெயர்பெற்ற இடம் என்னலாம்; இக் கோவிலுக்கு எதிரே ஏறத்தாழ 200 கெஜ தூரத்தில் கோவிலை நோக்கியபடி ஒரு பிள்ளையார் கோவில் இருக்கின்றது. அதைப்போலும் பெரிய பிள்ளையாரை நாங்கள் அன்றுவரை எங்கும் பார்த்ததேயில்லை. அதன் உயரம் எட்டடிக்கு மேற்பட்டதாகலாம். குருக்கள் ஏணிவைத்தேறித் திருமஞ்சனம் செய்கிறார் என்று தெரிகிறது. இந்தத் திருவிடத்தில் அமைதி தாண்டவம் புரிகிறது. மன ஒருமைக்கு ஏற்ற இடம் இத் திருவக்கரை என்னல் மிகையாகாது.

பறவைகளின் இல்வாழ்வு

சாமுவேல் ஆபிரகாம் B. A; B. SC. (HONS.) L. T. விலங்கியல் துறைத்தலைவர், அமரிக்கன் கல்லூரி, மதுரை.

இறைவன் படைப்பில் இறும்பூது உண்டாக்கக் கூடிய உயிர்களில் ஒன்று பறவை. சிறுபிள்ளை முதல் தள்ளாத கிழவர் ஈறுகப் புள்ளைக்கண்டு உள்ளங் களிக்காதார் யாருளர்? நாகணவாய்ப் புள்ளின் மோகனச் சொல்லைக்கேட்டு மகிழாதார் யாருமுண்டோ? பச்சைக்கிளியைப் பார்த்த பச்சிளங்குழந்தையும் அப்புள் தன் இச்சைக்குரியது என நினைக்கின்றது; அது மிழற்றும் மழலைகேட்டு அதன் உள்ளம் திளைக்கிறது. குயிலினுமினியகுரலாள் "கிளிமொழியாள்" "அன்ன நடையாள்' என்றெல்லாம் மகளிரைப் பாவலரும் நாவலரும் நவிலும் போது அவர்கள் அப்புட்களின் நலத்தைக் கண்டார்களெனக் கொள்ள வேண்டியுளது.

பறவைகளின் பரிணுமச்சரித்திரமும் அவற்றின் அமைப்பும் உண்மையிலேயே வியப்புதான். அவை பாலூட்டிகளைப் போல, பல்லி போன்ற ஊர்வனவற்றினின்று பரிணமித்தனவென்று உயிர்நூல் வல்லுனர் உரைக்கின்றனர். ஏனெனில் பறவைகளின் உடற்கூற்றமைப்பு ஊர்வனவற்றின் உடற்கூற்றமைப்பை ஒத்திருக்கிறது. உள்ளவபவத் தொகுதிகள் ஒவ்வொன்றிலும் முன்கூறிய இருவகைப் பிராணிகளும் ஒன்றையொன்று ஒத்திருக்கின்றன. ஆனால் பறவைகள் விசும்பிற் பறக்கவும் தரையில் ஓடவும் சில சிறப்பு அமைப்புகளை உடையனவாயிருக்கின்றன. உதாரணமாகப் பறவையின் முன்கால்கள் இறக்கைகளாக மாறிவிட்டன. ஊர்வனவற்றின் செதில்கள், பறவையின் இறகுகளாக மாறின. இறக்கைகளை இயக்க, மார்புத்தசைகள் பெரியவையாக உள்ளன. உதாரணமாக பெருந்தோட் தசை (PECTORALIS MAJOR) மாத்திரம் புறுவின் மொத்த எடையில் 1/5 பாகம் உள்ளது. தவிரவும் பறவைகள் ஆகாயத்திற்பறக்க அவற்றின் எலும்புகள் இலேசாக இருக்கின்றன. எடுத்துக்காட்டாக: இருபத்தைந்து இராத்தல் எடையுள்ள கூழக்கடா (PELICAN) வின் உடம்பிலுள்ள எலும்புக்கூட்டின் எடை இருபத்துமூன்றே அவுன்சுதான். மனிதன் வானவூர்தியைச் செய்யுமுன் பறவைகளின் அமைப்பைப் படித்துப் பின்னுல் அதைச் செய்தானென்றுல் மிகையாகாது. ஆயினும் மனிதன்செய்த எந்தப் பறக்கும் சாதனத்துக்கும் இருப்பதைவிடப் பறவைக்குத்தான் காற்றை எதிர்க்கும் சக்தி அதிகம் உண்டு.

இனிப் புட்களின் இல்லறவாழ்க்கையை ஆராய்வோம். கழுகு காகம் பருந்து முதலியன மரங்களின் உச்சியில் சிறு சுள்ளிகளாலும், வைக்கோல் முதலியவற்றாலும் கூடுகட்டுகின்றன. அன்றில் பனைமரங்களிற் கூடமைப்பதைக் கூறவந்த கலித்தொகையாசிரியர் "மன்றிரும் பெண்ணை மடல்சேரன்றில்" என்றூர். மைனு, கிளி, மரங்கொத்தி முதலிய பறவைகள் மரப்பொந்துகளில் வசிக்கின்றன. மீன்கொத்தி ஆற்றங்கரை அல்லது கிணற்றுச் சுவர்களில் ஏறக்குறைய இரண்டடி

நீளமுள்ள பொந்துகளில் வசிக்கிறது. பஞ்சலிட்டான் (Bee-Eater) ஆற்றங்கரையில் நாலடி நீளமும் இரண்டங்குலம் குறுக்களவுமுள்ள பொந்தில் வசிக்கிறது. தேன்சிட்டு, தூக்கணாங்குருவி இவற்றின் கூடுகளைப் பார்த்து ஆச்சரியப்படாதார் யாருமில்லை. இரண்டு மூன்று மெல்லிய இலைகளைச்சேர்த்து அவற்றை நாரினாலோ, நூலாலோ தைத்துக் கூடு அமைத்துக்கொள்கிறது, தையற்காரப்பறவை. ஆம்பல், அல்லி, அம்புயம் மத்தியில் வசிக்கும் அல்லிக்கோழி (Jacana) நீர்த்தாவரங்களின் மத்தியில் மிதக்குங் கட்டையோ, அல்லது நிலையாக வுள்ள கட்டையோ, குச்சிகளாலும், இலை, தழை முதலியவற்றாலும் அமைக்கின்றது. காடை, கௌதாரி யினங்கள் தரையில் குழிகல்லி அதை முட்டையிடும் இடமாக வைத்துக்கொள்கின்றன. இவ் வண்ணமே செய்கின்றன சில கடல்வாழ் பறவைகள்.

பொதுவாக, மற்றபிராணிகளைவிடப் பறவைகள்தான் மிக்க அழகிய வர்ணங்களையுடையன. பனங்காடை (Indian Roller) பறக்கும் போது அதன்சிறகில் இருவித நீலநிறங்களைக் காணலாம். பஞ்சவர்ணக்கிளியின் பன்னிறங்கள் எவ்வளவு இரஞ்சிதமாயுள்ளன! தோகை விரித்தாடும்போது அதன் இறகின் நீலநிறத்தையும் "கண்" போன் றிருக்கும் கோலத்தையும் கண்ணுற் பருகாதார் உளரோ! ஆண் பறவைக்குத்தான் அதிக அழகிய வர்ணங்கள் உண்டு. தன் இல்லக் கிழத்தியான பேட்டின் கவனத்தை ஈர்க்க ஆடவனான ஆண்பறவைக்குப் பன்னிறஉடை பயன்படுகிறது. மனித இனத்திலுங்கூட ஆடவர் பெண்டிர் ஒருவருடைய கவனத்தை ஒருவர் பலவர்ண ஆடையுடுத்தி ஈர்ப்பது கண்கூடு. சாதாரணமாகப் பெட்டையின்நிறம் வெள்ளை, கருப்புப் புள்ளிகளுள்ளதாயோ அல்லது ஆண்பறவையின் நிறத்தை விடச் சற்று மங்கியோ இருக்கும். இதற்குக்காரணம் என்னையோ! பெரும்பாலும் பெட்டைகள்தான் அடைகாப்பவை. அவை அடை காக்கும்போது, விரோதிகளின் கவனத்தைத் தம்பாட்டு இழுக்கக் கூடாதல்லவா? அவ்வாறு விரோதிகளின் கவனத்தைக் கவர்ந்தால்

அவ் விரோதிகள் பெட்டையைக் கொன்று அடையிலுள்ள அண்டங்களையும் அபகரித்து விடும் என்பது ஒரு சாரார்கொள்கை. ஆனல் இன்னெரு குழுவினர் இதை மறுக்கின்றனர். ஏனெனில் புலாலுண் புட்கள் அசையும் பொருட்களைக் காணுமேதவிரக் கூண்டிலிருக்கும் அசையாப் பறவையைப் பார்க்கமுடியாதென அவர்கள் வாதிக்கின்றனர். பின்னும் வானுலக ஈ பிடிப்போன் (Paradise fiy catcher) என்ற பறவையினத்தில் ஆண்பறவை நீண்ட வெண்ணிற வாலிறகுகளையுடையது. பெண்ணுடன் மாறிமாறி அடையிலுட்காரும். அது கூண்டிலிருக்குபோது அதன் நிறம் அதற்குப் பாதுகாப்பளிப்பதாக இல்லை. ஆயினும் விரோதிகள் தாக்குவதில்லைஎனப் பின்சாரார் கூறுகின்றனர்.

காடை (Button Quill) பன்னிற உள்ளான் (Painted Snipe) முதலிய பறவைகளில் ஆண்கள் அடைகாக்கின்றன. ஆகையால் இப் பறவைகளில் பேடுதான் பலவிதவர்ணங்களையுடையன. ஆண்கள் மங்கிய வர்ணங்களையுடையன.

மக்கள் காலத்துக்குத் தகுந்தாற்போல் கலையுடுத்துவர். மணமக்கள் தங்களைச் சிறப்பான மங்களகரமான உடையுடுத்திச் சிங்காரிப்பர். பறவையுலகிலும் இவ்வித நியதி நிலவுகின்றது. கருவாய் மூக்குக் கொக்கு (Little Egret) தூக்கணாங்குருவி முதலிய பறவைகள் இனப் பெருக்கக் காலத்தில் மற்றக் காலத்திலிருப்பதைவிட வேறுபட்ட தோற்றமும் நிறமுமுள்ள இறகுகளையுடையனவாயிருக்கின்றன. கருவாய்மூக்குக் கொக்கில் கலவிக்காலத்தில் தலையுச்சியில் இரு நீண்ட இறகுகளும் மார்பிலும் முதுகிலும் மிக்க அழகான மற்ற இறகுகளும் தோன்றுகின்றன. இவ் விறகுகளைக் கலவிமுன்கால இறகுகள் (Nuptial plumes) என்றழைக்கிருர்கள். இவ்விறகுகளைக் கீழ்த்தேசமக்கள் தங்கள் தலைப்பாகைகளில் அணிந்துகொள்வார்கள். இவ் விறகுகளுக்காக சிந்துமாநிலச் செம்படவர்கள் இப் பறவைகளை வளர்க்கிருர்கள்.

ஒவ்வொரு ஆண்பறவையும் தான் கூண்டமைக்கும் இடத்தைச் சுற்றிலும் குறிப்பிட்ட கால் அல்லது அரை ஏக்கர் பரப்புள்ள இடத்தைத் தன் ஆட்சி மண்டலமாக (Torritory) ஏற்படுத்திக் கொள்கிறது. நம் நாட்டுக் கரிச்சான் அதாவது ஆண்கரிச்சான் மேற்கூறிய மண்டலம் அல்லது சூழலைத் தெரிந்துகொண்டவுடன் அதற்கு அறிகுறியாகத் தன் "இன்னிசையைக்" கிளப்புகிறது. இவ் வின்னிசை, தன்காதலியைத் தன்சூழலுக்கு ஈர்க்கவும் வேறொருஆடவன் அங்கு வாராதபடி எச்சரிக்கவும் உதவுகின்றது. இவ்வாறு ஏற்பட்டுள்ள மண்டலத்துள் இன்னொரு ஆண்பறவை அறிந்தோ அறியாமலோ வந்துவிட்டால், முன்னதாகவே அவ்வட்டாரத்தை ஆக்கிரமித்த ஆண்பறவை புதிதாகவந்த ஆண்பறவையைத் தன்குரலால் எச்சரிக்கின்றது. எச்சரிக்கை பயனற்றுப் போனால் இரு ஆண்பறவைகளுக்கும் போர்நிகழ்கின்றது. இம் மண்டல அமைப்புக்குக் காரணம் உண்டு. கூண்டுகள் மிக்க நெருங்கியிருக்குமானால், அவற்றிற் பிறக்கும் எல்லாக் குஞ்சுகட்கும் உணவுதேட அக் குஞ்சுகளின் பெற்றோர்க்குக் குறிப்பிட்ட பரப்பளவுள்ள இடம்வேண்டுமல்லவா? ஆகையாற்றான் ஒவ்வொரு ஜோடிப் பறவைகளும் ஏறக்குறைய ஒரேபரப்பும் உருவமும்உள்ள இடத்தைத் தங்கள் ஆதிக்கத்துக்குட்பட்ட குறுநிலமாக அமைத்துக் கொள்கின்றன.

பறவைகள் இடும் அண்டங்களும் அவை இடப்படும் சூழலுக்கு ஏற்றவாறு ஒத்தமைந்துள்ளன. பொந்துகளுக்குள் இடப்படும் முட்டைகள் (கிளி, பஞ்சுவிட்டான் முட்டைகள்) வெள்ளைநிறமுடையன. ஆள்காட்டிப் பறவை (Lapwing) ஆற்றுப்படுகை தரிசு நிலங்களில் முட்டையிடுகிறது. அவற்றின் நிறம் மண் நிறத்தை ஒத்துள்ளது. அல்லிக்கோழி மிதக்கும் இலைகள்மேல்உள்ள கூண்டில் முட்டைகளையிடுகிறது. அவை நீரில் அழுகும் பழுப்புநிற இலைகளை ஒத்திருக்கின்றமையால், சுலபமாய் மற்றப் பிராணிகளுக்குத் தென்படா.

இனி ஆண்பறவைகள் தம்பெட்டைகளை வசிகரிப்பதற்காகக் கையாளும் முறைகளைப்பார்ப்போம். ஆண்மயில் தன்உடம்பின் இறகுகளைச் சிலிர்த்தும் வாலிறகுகளை விரித்தும் தன் காதலியின்முன் நடனம் ஆடுகின்றது. ஆண்பனங்காடை தன் அழகிய நீலநிற இறகுகளை விரித்துக்கொண்டு ஆகாயத்தைநோக்கி அம்புபோல் மேனேக்கிப் பாய்ந்தும், அதேவேகத்தில் விமானம்கீழ்நோக்கிவருவதுபோல் கீழ்நோக்கிப் பாய்ந்தும், தன்காதல்லீலைகளைக் காட்டுகிறது. சிலபறவைகள் கர்ணமிர்தமான கானத்தால் காதலியின் கவனத்தைக் கவருகின்றன. சில கொக்குவகைகளில் (Egrets) ஆணும் பெண்ணும் தத்தம் நீண்ட கழுத்துக்களை ஒன்றோடொன்று சுற்றிக்கொள்கின்றன. இதுதான் காதலர்கள்முடிச்சு என்பதுபோலும்! மனிதவர்க்கத்தில் ஆண்மகன் தன்காதலிக்குப் பரிசு அளிப்பது வழக்கமல்லவா? ஒருவகை வக்காக் கொக்கு (Black Crowned Night Heron) தன் ஆருயிர்த் துணைவிக்குச் சிறுகுச்சிகளை நன்கொடையாக அளிக்கிறது. டெர்ன் (Tern) என்றபறவை தன்பேடைக்கு மீனைப்பரிசளிக்கின்றது; என்னவிந்தை?

பைரி, அன்றில், பருந்து, புறு முதலிய பறவைகளில் ஆண், பெண் இவைகளுக்கிடையேயுள்ள உறவை ஒருதாரமணத்திற்கு ஒப்பிடலாம். ஏனெனில் பெட்டை இறந்தோ அல்லது காணமலோ போய்விட்டாலொழிய ஆண் பறவை வேருெரு பெட்டையைத் தேடுவதில்லை. “பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு அறனென்றோ ஆன்ற ஒழுக்கு” என்ற வள்ளுவர் வாக்குக்கு இப் பறவைகள் எடுத்துக்காட்டாக வாய்ந்துள்ளன என்றல் மிகையாகாது. தூக்கணங்குருவி சாதாச்சேவல் முதலியன பலதார மணமுறையுடையன. ஆண் தூக்கணங்குருவி தனிமையாகவே தன் கூண்டை ஆரம்பிக்கிறர்; பெண்ணொருத்தி எழுந்தருளுகின்றாள்; கூண்டின் அழகைக் கண்ணுற்பருகுகின்றாள். அவ்வளவுதான்! அக் கூண்டையமைக்கும் ஆடவன் அவளுக்குகந்த வரனுகிவிடுகிறான். அவள் கூண்டின் உட்புறத்தைச் சிங்காரிக்கும் சேவையிலீடுபடுகின்றாள். கூடு முற்

றுப் பெற்றவுடன் பெட்டை இரண்டு முதல் நான்கு தூய வெள்ளை முட்டைகளை இட்டு அவற்றின்மேல் அமர்கின்றாள். உடனே ஆண் மகன் அண்மையில் அடுத்த கூண்டமைக்க அகன்று விடுகின்றான். இரண்டாவது கூட்டிலும் வந்துவந்து சிக்கிக்கொள்கிறாள் இன்னொரு பெட்டை. இவ் வண்ணம் மூன்று, நான்கு மனைவிகட்குத் தலைவனாகிறார், ஒரே திருவாளர் ஆண் தூக்கணாங்குருவி!

சில மலைவாழ்குடிகளில் ஒரேபெண் பலகணவர்களை கலியாணம் செய்துகொள்கிறாள். பாரதத்தில் பாஞ்சாலி ஐந்து கணவர்களைப் பாணிக்கிரகணம் முடித்ததைப் படிக்கிறோம். பறவைகளிலும் சில பாஞ்சாலிகள் உண்டு. இவற்றிற்கு உதாரணமாகக் காடை (Bustard Quail and Button Quail) களை உரைக்கலாம். காதலிருவர் கருத்தொருமித்துக் கலந்து இல்லறவாழ்க்கையில் ஈடுபடுகின்றனர். காடைச்சமூகத்தில் பெண்ணாட்சிதான் உண்டு. ஆகையால் ஆண்கள்தான் அடைகாக்கவேண்டும். அவ்வாறு ஆண்பறவை அடையில் அமர்ந்ததும் இன்னொரு வரனை வரவேற்கப் பெண் அகன்றுவிடுகிறாள்! இரண்டாவது ஆணுடன்சேர்ந்து பெண்காடை 3 அல்லது 4 சற்று பழுப்புநிறமான முட்டைகளை யிடுகிறது. அவற்றின் மேல் இரண்டாவதுகணவனை இருத்திவிட்டு நங்கைநழுவிவிடுகிறாள், மூன்றுவது நம்பியைநண்ணி. இவ்வாறு ஒரேசமத்தில் ஒருபெட்டை பல குடும்பங்கட்குத் தலைவியாகிறாள்! இவ்வாறே பன்னிற உள்ளான் (Painted Snipe) இனத்திலும் நிகழ்கிறது.

பலபறவைகளில் ஆணும் பெண்ணும் அடைகாப்பதில் பங்கெடுத்துக்கொள்கின்றன. சில புலாலுண்ணிகள், அன்னம், நாரை முதலியவற்றில் ஆண் அடையில் அமராவிட்டாலுங்கூட அது கூட்டின் அருகில் அமர்ந்திருந்து கூட்டிற்கோ தலைவிக்கோ இடுக்கண் இழைக்கவரும் ஒன்னார்களை விரட்டிவிடும். ஹார்ன்பில் (Horn bill) என்ற பறவையினத்தில் பெண்பறவை மரத்தின்பொந்தில் முட்டை

யிடுகிறது. பின்பு அடையில் உட்கார்ந்துகொண்டு பொந்தின் வாயிலைத் தன்மலத்தால் கரண்டிபோன்ற அலகால் அடைக்கிறது. ஒரு சிறு துவாரம் மாத்திரம் விடப்படுகிறது. இச் சிறு துவாரத்தின் வழியாகத் தலைவன் தலைவிக்கு உணவூட்டுகின்றான். அன்புடனே அடிக்கடிசென்று உணவைத் தேடிக்கொண்டுவந்து தன்பெட்டைக்கு ஊட்டும் ஆண்மகன் என்பு தோலாகிறான். குஞ்சுகள் முட்டையி லிருந்து வெளியேவந்த ஒரு வாரத்திற்குப் பின்பு தான்கட்டிய கோட்டை உடைத்து விட்டு, பெண் வெளியே வந்து திரும்பவும் அதைக்கட்டிவிடுகிறாள். பிறகு ஆணும் பெண்ணும் ஒத்துழைத்துத் தம் குஞ்சுகளுக்கு உணவூட்டுகின்றன.

எல்லாப்பறவைகளும் அடைகாப்பதில்லை. உதாரணமாக எகிப்து தேசப் ப்லோவர் (Plover) தன்முட்டைகளைக் குழியில் இட்டுப் புதைத்துவிடுகின்றது. மிகக் குளிர்ந்த நேரத்தில் மாத்திரம் தன் முட்டைகளை அடைகாக்கின்றது. நெருப்புக்கோழியும் (Ostrich) இவ்வாறே தன்முட்டைகளைப் புதைக்கிறது. மிக்கசூடான பிரதேசங் களில் பகலில் முட்டைகள் அடைகாக்கப்படுவதில்லை. சற்றுகுளிர்ந்த பாகங்களில் முட்டையிடுவன, பகலில் பெண்ணும் இரவில் ஆணுமாக அடைகாக்கின்றன. குளிர்ந்த காகங்களில் ஆண் நெருப்புக்கோழி மாத்திரம் அடைகாக்கின்றது. ஆஸ்திரேலிய ப்ரஷ்டர்க்கி (Brush Turkey) அநேக அடி உயரமான அழுகும் இலைதழைகளான குவி யலை உண்டு பண்ணி, அதன் மத்தியில் ஆழமான இடத் தில் முட்டைகளையிடுகிறது. அழுகும் இலைதழைகளால் உண்டா கும் சூட்டினால் முட்டைகள்பொரித்துச் குஞ்சுகள் வெளிவந்து உடனேநடந்து ஓடிவிடுகின்றன. மெகபோட்ஸ் (Megapodes) என்ற பறவை தன்முட்டைகளைக் கடற்கரையில் ஒரு அடி ஆழமான குழியில் இட்டு மணலால்மூடிவிட்டுச் சென்றுவிடுகிறது. குஞ்சுகள் பொரித் துத் தாமாகவே மணலைத்தள்ளிவிட்டு வெளியேவந்து உடனே காட் டுக்குள் ஓடிவிடுகின்றன.

அமெரிக்காவில் பசுப்பறவை (Cow-bird) யும், ஆப்பிரிக்காவின் தேன்காட்டி (Honey guides) களும் அடையில் அமருவதில்லை. அவை தம்முட்டைகளை வேறொரு பறவையின் கூண்டிவிட்டு அப்பறவை தம் முட்டைகளை அடைகாக்க வைத்துவிடுகின்றன. நம்நாட்டுக் குயிலின் தந்திரங்களைப்பாருங்கள். வல்லவனுக்கு வல்லவன் வையகத்திலுண்டல்லவா! மிகத்தந்திரமுள்ள காக்கையின் கூட்டிலேயே பெண்குயில் தன்முட்டைகளை யிடுகிறது. எப்படியெனில் காகத்தின்நிறமான கருங்குயில் (ஆண்குயில்) காகங்கள் கூடுகளமைத்துள்ள மரத்திற்குச்செல்கிறது. உடனே அங்குள்ள வாயசங்கள் ஆண்குயிலைவிடாது விரட்டிச்செல்கின்றன. மாயமான் மாரீசன் இராமரை நெடுந்தூரம் இட்டுச்சென்றதுபோல், ஆண் குயிலும் காகங்களைச் சேண்மையில் இழுத்துச்செல்லுகிறது. இதற்கிடையில் கரும்புள்ளிகளும் வெண்கோடுகளும் பொருந்திய பெண்குயில் திருட்டுத் தனமாகக் காகத்தின்கூட்டில் அமர்ந்து தனதுமுட்டைகளை யிட்டுச் சென்றுவிடுகிறது. குயில் முட்டைகளும் காகத்தின் முட்டைகளும் நிறத்தில் ஒத்திருக்கின்றன. குயிலினங்கள் பலவகைப்படும், ஒவ்வொரினக்குயிலும் ஒவ்வொருவிதமான மற்றப்பறவைகளது கூண்டில் தம்முட்டைகளை யிடுகின்றன. பெண் திரும்புகின்றது. எல்லா முட்டைகளையும் தன் முட்டைகளெனக் கருதுகின்றது, ஆணைக்கும் அடிசறுக்கும். காகம் எல்லாமுட்டைகளையும் சேர்த்து அடைகாக்கிறது. முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளியே வருகின்றன. காகத்தின் குஞ்சுகளும் குயிற்குஞ்சுகளும் நிறத்தில்வேறுபடுவதில்லை, கைம்மாறு கருதாது தம்கடமையை நிறைவேற்றும் கர்மயோகிகளான காகங்கள் தம்சிசுக்கள் அல்லது குயிற்குஞ்சுகள் என வேற்றுமையின்றி உணவூட்டுகின்றன. குயிற்குஞ்சுகள் அங்காந்து காகங்கள் கொணர்ந்த ஆகாரத்தை ஏற்று அயின்று விடுகின்றன. காகத்தின் குஞ்சுகட்குச் சிறுகவளம்தான் கிடைக்கிறது. குயிற் குஞ்சுகள் தம் தீச்செயலை இதோடு நிறுத்துவதில்லை. உண்டவீட்டுக்கு இரண்டகமும் விளைவிக்கின்றன. அதாவது சிலசமயங்களில் குயிற்குஞ்சுகள்

காகத்தின் குஞ்சுகளைக் கூண்டினின்று வெளியே தள்ளி விடுகின்றன. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகக் குயிற்குஞ்சுகள் வளர்கின்றன. நன்றாக இறகுகள் முளைத்தவுடன் தம் மாற்றாந்தாய் தந்தையரைவிட்டு, செய்ந்நன்றி கொன்ற மக்கள் புரையக் குயிற் பார்ப்புகள் பறந்துவிடுகின்றன.

ஆகவே குயிற்குஞ்சுகள், புல்லுருவிகள் அல்லது ஒட்டுண்ணி போலக் காகம் கொணர்கின்ற உணவையுண்டு வளர்கின்றன. மாதாவின் உதரத்தில் சிசுவின் வாழ்க்கையும் அவ்விதமே. தாயினது உடம்பின் உபயோகத்துக்கான உணவைக் கருப்பையிலிருக்கும் சிசு உண்டுவளர்கின்றது. தாயினுடம்பினின்று வெளிப்போந்த பின்னும் தாயின் கையையே சிசு உணவுக்காக நாடிநிற்கின்றது. பின்னர் குழந்தை பெரிதாகி மனிதனாகி மாதாவையும் மறக்க வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. இவ்வுண்மையைத் திருமூலர் தம் திருமந்திரத்தில் "கரு உற்பத்தி" என்ற பிரிவில் எவ்வளவு அழகாய் வர்ணிக்கிறார்:—

குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக் கூட்டிட்டால்
அயர்ப்பின்றி வளர்க்கின்றது போல
இயக்கில்லை போக்கில்லை ஏனென்ப தில்லை
மயக்கத்தால் காக்கை வளர்க்கின்ற வாறே.

பறவைகளது அடைகாக்கும் காலமும் வேறுபடுகிறது. தேன் சிட்டு போன்ற சிறுபறவைகள் இரண்டு வாரங்களும் பெரிய பறவைகளான நெருப்புக்கோழி சுமார் இரண்டு மாதங்களும் அடை காக்கின்றன. வாத்து இனத்திலேயே சிறுவாத்துக்கள் இரண்டுவாரங்களும் சற்றுப் பெரிய வாத்துக்கள் ஒரு மாதமும், அன்னம் சுமார் நாற்பது நாட்களும் அடையில் அமர்கின்றன.

பறவைகளின் வீட்டுச்சுத்தத்தைப்பற்றி ஆராய்வோம். காடை, கௌதாரி யினங்களில் குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளிப்போந்த

வுடன் நடந்து ஓடக்கூடியன. ஆனால் சில புட்களின் பார்ப்புகள் கண் விழியாத நிலையிலும் நடக்காத நிலையிலும் முட்டையிலிருந்து வெளியேறுகின்றன. உடம்பின் சூட்டைக்காக்க நுண்ணிய இறகும் கூட இல்லை. இந் நிலையிலும் இறகு முளைத்தபிற்கு சின்னாட்களுக்கும் இவை கூண்டிலேயே எச்சமிடுகின்றன. மலம் வெளியேற்றப் படா விட்டால் குஞ்சுகளின் சுகாதாரம் கெடுமல்லவா? ஆகையால் பார்ப்பு கழிக்கும் எச்சத்தைத் தாய்ப்பறவை அகற்றுகின்றது. மனிதவர்க் கத்திலும் சேய்கழிக்கும் மலத்தைத் தாய் அகற்றுகின்றாளல்லவா? சிறுகுஞ்சுகளின் மலம் ஒரு மெல்லிய உறையால் மூடப்பட்ட பொட் டலமாக வெளியே வருகின்றது. தாய்ப்பறவை அம்மலப் பொட்டலத் தைத் தூக்கிச் சென்று, கூட்டுக்கு வெளியே எறிந்து விடுகிறது. நம் நாட்டுப் பறவையான புல்புல் தன் குஞ்சுகட்கு உணவு அருத்தியவுடன், குஞ்சுகளின் ஆசனவாயிலைச் சுற்றிலும் உள்ள நுண் இறகுகளைத் தன் அலகினால் தடவுகிறது. உடனே மலப் பொட்டலம் வெளியே வருகிறது. அக்கணமே அது தாய்ப்பறவை யால் அகற்றப்பட்டுக் கூட்டிற்கு வெளியே எறியப்படுகிறது. ராபின் என்ற குருவியும் மேற்கூறிய வண்ணம் கூட்டைச் சுத்தப்படுத்தும் பறவைகளுக்குப் பிறிதொரு உதாரணம். இப் புள் தன்குஞ்சுகளின் மலப் பொட்டலத்தை எடுத்துச் சென்று சுமார் நூறு அடிக்கு அப் பாலுள்ள மரத்தினுச்சிக்குச் சென்று அங்கிருந்து அவ் வெச்சப் பொட்டலத்தைக் கீழே எறிகிறது. மக்கள்கூட மாக்களாகிய பறவை களிடமிருந்து படிக்கவேண்டிய பாடங்களில் இதுவும் (சுத்தம்) ஒன்று.

சட்டதிட்டங்கள் கட்டுப்பாடுகள் இல்லையேல், ஒரு சமூகமும், அதிலுள்ள அங்கத்தினரின் இல்வாழ்வும் சிதைவுறும். பறவையுல கிலும் மேற்கூறிய சட்டதிட்டங்கள் ஒழுங்குகள் இருப்பதாகப் புள் ளாராய்ச்சியாளர்கள் கண்டுள்ளார்கள். பறவைகளிலே காகங்கள், காரைகளிடையேதான் சமூகவுணர்ச்சி அதிகமாகக் காணப்படுகிறது. காகங்கள் வசிப்பதும் கூட்டமாகத்தான். உணவு உண்பதும் உற் றார் உறவினரோடுதான். "காக்கை கரவா கரைந்துண்ணும், ஆக்க மும் அன்ன நீரார்க்கே யுள' என்று செந்நாப்போதார் செப்பியதி லிருந்து காகங்களின் சமூகவுணர்ச்சியைச் செவ்வையாய் நாம் அறிய

லாம். காகங்கள் வயலிலோ சிறுகுன்றின் மீதோ அல்லது ஆற்றோரங்களிலோ கூடுகின்றன. தங்கள் நடுவில் குற்றவாளிகளை நிறுத்துகின்றன. எல்லாக் காகங்களும் சேர்ந்து ஒரே மனதாகச் சத்தமிட்டுக் குற்றஞ் சாட்டுகின்றன; விசாரணையிறுதியில் குற்றவாளியைத் தாக்குகின்றன. நிரபராதியாயிருந்தால் அப் பறவை பறந்துசெல்ல அனுமதிக்கப்படுகிறது.

சிட்டுகள் தம் சிற்றில்லையமைக்குங்காலை, அனுபவமில்லா இளஞ் சிட்டு, முதிர்ந்த சிட்டுக்களின் கூட்டிலிருந்து சிறு சுள்ளியையோ அல்லது சிறிதளவு வைக்கோலையோ களவாடினால், அவர்களது "பறவைச் சேவகர்கள்" திருடனான சிட்டுவின் கூண்டைச் சிதைத்து அச் சிட்டுக்குச் சிட்சை செய்கின்றனர்.

இனி நாரைகள் நல்லொழுக்கத்தை எவ்வாறு கடைப்பிடிக்கின்றன வென்றும் நவிலுவோம்.

பிரான்சுநாட்டு மருத்துவர் ஒருவர் சிமிர்னா நகரத்தில் வசிக்கையில், ஆராய்ச்சிக்காக, நாரையின் கூட்டிலிருந்து அதன் அண்டங்களை அகற்றி அவற்றிற்குப்பதிலாகக் கோழிமுட்டைகளை வைத்தார். பெண்ணாரை அடைகாத்தது. கோழிக் குஞ்சுகள் முட்டையினின்று வெளியே வந்தவுடன் ஆண்ணாரை ஆருயிர் நாரியைக் கைவிட்டகன்றது. நான்குநாட்களுக்குப் பின்னர் ஆண்நாரை நூற்றுக்கணக்கான மற்றநாரைகளுடன் திரும்பினர். எல்லோரும் கோழிக் குஞ்சுகள் பொரித்திருந்த பெண்ணாரையைச் சூழ்ந்தனர். விசாரணை ஆரம்பித்தது. சிலநாரைகள் வழக்கை வாதிப்பதுபோல் சத்தமிட்டன. இறுதியில் எல்லா நாரைகளும் தனியான பெண்ணாரையைத் தாக்கிக் கொத்திக் கொன்றன. குற்றமென்ன? பெண்ணாரை கோழிக் குஞ்சுகளைப் பொரித்தமையால் அது தன் கற்பைக் காத்துக்கொள்ளவில்லை என்று மற்ற நாரைகள் நினைத்தன போலும்!

ஹங்கேரி நாட்டிலிருந்து இன்னொரு எடுத்துக்காட்டு. சிகே (Cseke) என்னும் பாதிரியார் ஒரு சதுப்புநிலத்தின் வெளியிடத்தில்

அநேக நாரைகள் குழுமுவதைக் கண்ணுற்றார், அவைகள் நாப்பண் தொங்கிய இறகுகளும் விசனத்தோற்றமுமுள்ள இருநாரைகள்நிறுத் தப் பட்டன. ஒரு பெரியநாரை வந்து அச் சோகம் நிறைந்த நாரை களுடன் பேசுவதுபோல் பாவனை செய்தது. ஒருவேளை குறுக்கு விசாரணை நடந்ததுபோலும்! பின்பு பெரிய நாரையான நீதிபதியும் மற்ற வயதில் முதிர்ந்த நாரைகளும் தனித்துப் போய்ப் "பேசி" விட்டுத் திரும்பின. பின்னர் நீதிபதி "குற்றவாளிகளில்" ஒன்றைத் தள்ளித்தரையில்உட்காரச்செய்துவிட்டு, மற்றக் "குற்றவாளி" யிடம் பேசுவதுபோல் தன் அலகை ஆட்டிச் சத்தம் செய்தது. அந்நாரை உடனே எழுந்து பறந்து சென்றது. பின்பு "நீதிபதி" இரண்டாவது குற்றவாளியைத் தன் அலகால் குத்தியது. அதுவும் எழுந்து பறந்து செல்ல எத்தனித்தது. உடனே நாரைக்கூட்டம் அதன் பின்னுற் பறந்து சூழ்ந்து தாக்கவே தனியான நாரை தரையில்இறங்கவேண்டி யிருந்தது. மற்ற நாரைகளும் அதன்மீது பாய்ந்து கொத்திக் கொன் றன. பின்னர் ஜோடி ஜோடியாகப் பறந்து போய்விட்டன. லீகே பாதிரியார் இறந்த பறவையைச் சோதித்து அது ஆண்பறவையெனக் கண்டார். பின்பு அவர்கள் அப் பிராந்தியத்திலுள்ள ஒரு பண்ணை யின் புகைப்போக்கியின்மேல் ஜோடிநாரை கூடுகட்டி யிருந்ததாகவும் அதில் குஞ்சுகள் இருந்ததாகவும் ஆனுல் சில நாட்களாகப் பெண் ணுரை கூட்டிற்கு வரவில்லையென்றும் ஒரு குடியானவனிடம் விசா ரித் தறிந்தார். அப்போதுதான் நாரைகளின் நீதிமன்றத்தில் நடந்த நடவடிக்கைகள் விளங்கின. கொல்லப்பட்ட ஆண்நாரை கொல்லாது விடப்பட்ட பெண்ணுரையை அதன் கணவனிடமிருந்து பிரித்துச் சின்னுட்களாகச் சென்றுவிட்டது. ஆகவே அது சோரத்திற்காகக் கொல்லப்பட்டது. பெண்ணுரையை மற்றவை ஏன் கொல்லவில்லை யென்றுல் அது திரும்பிவந்து குஞ்சுகட்கு மறுபடியும் உணவு ஊட் டிக் கொண்டிருந்தது. அதைக் கொன்றுவிட்டால் குஞ்சுகள் வேண் டிய உணவை அடைய முடியாது. நாரைகளின் நியாயம் என்னே! இரக்கசிந்தனை என்னே!!

இயேசுவின் சாயல்

—o—

தாமஸ் ஏகெம்பிஸ். [மொழிபெயர்ப்பு —இ. பழனியப்பன்]

[ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தாமஸ் ஏகெம்பீஸ் என்னும் கிறித்துவச் சந்நியாசி தம்முடைய சகோதர சந்நியாசிகளின் உபயோகத்திற்காக எழுதப்பட்ட இந்நூல் கிறித்தவ உலகத்திலே பைபிளுக்கு அடுத்தபடியான சிறந்தநூல் என்று கருதப்பட்டு வருகின்றது. உலகில் பல்வேறு மொழிகளில் இந்நூல் பொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பண்டைய தமிழ்ப் பெரியோர்களின் கருத்திக்கள் இதில் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளதனை நாம் காணலாம். தமிழில் நடுநிலையான ஒரு மொழிபெயர்ப்பு வேண்டுமென்ற விருப்பத்துடனேயே இதனை வெளியிடுகின்றோம். மேலும் இன்றைய உலக அமைதிக்குத் தீங்கு விளைவிக்க முனைந்து நிற்கும் நாடுகள் தாங்கள் கிறித்துவின் அன்பிற்குரியவை எனச் சொல்லிக்கொள்ள உரிமையுடையனவா என்பதனை முடிவுசெய்ய இக் கட்டுரைகள் பயன்படுமென்றோ?]

ஆன்மீக வாழ்விற்குப் பயன்படுவனவற்றை வலியுறுத்தல்

1. இயேசுவின் சாயலும் உலக மாயையை வெறுத்தலும்

“என்னைப் பின்பற்றுவோர் இருளிலே நடவார்” என்றார் கர்த்தர். இது இயேசுவின் மொழியாகும்.

இருள்சேரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு—திருக்குறள்.

நாம் நமது அகவிருளைப் போக்கவும் தெள்ளியராக விளங்கவும் இயேசுவைப் போன்று வாழவேண்டும் என்பதனை வலியுறுத்தி உரைப்பனவாகும் இச் சொற்கள். ஆகவே, இயேசுவின் வாழ்வைப்பற்றிய சிந்தனைகளே நமது முதன்மைச் செயலாக விருக்கட்டும்.

அறவோர் தத்துவங்களிற் சிறந்தவை இயேசுவின் தத்துவங்களே. மனத்திட்பம் உடையவர் அவற்றுள் உடலுக்கும் உயிருக்குமான ஓர் உணவு பொதிந்திருப்பதைக் காண்பர். ஆனால், இயேசுவின் வேதத்தைப் பலமுறை கேட்டோர் பலர் அதில் விருப்பம் குறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். அதற்குக் காரணம் அவர்களிடம் இயேசுவின் உள்ளுணர்ச்சி யில்லாமையே யாகும். இயேசுவின் மொழிகளை முழுமையாகவும் உணர்ச்சியுடனும் அறிய விரும்புகின்றவர்கள் தங்களுடைய வாழ்க்கை முழுவதையும் இயேசுவைப் போன்றே நடத்த முயலவேண்டும்.

தன்னடக்கமில்லாத திரிமூலத்தின் (Trinity) வெறுப்பிற்கு ஆளாகிக் கொண்டு திரிமூலத்தைப்பற்றி விரிவாகப்பேசுவதால் நீ அடையும் பயன் என்னே? உண்மையில் பொருள் பொதிந்த வார்த்தைகள் மட்டும் ஒரு மனிதனைச் செந்தன்மைபூண்ட சான்றோனாக்கிவிடாது; ஆனல், அறவாழ்வொன்றே அவனை ஆண்டவனின் அன்பிற்கு உரியவனாக்கும். விளக்கத்தைத் தெரிந்து கொள்ளமுயன்றேன், ஆனல், மனச்சாட்சியின் உறுத்தலையே உணர்ந்தேன்.

இயேசுவின் வேதாகமங்களையும் தத்துவ ஞானங்களின் அறவுரைகளையும் மனப்பாடமாகத் தெரிந்திருந்தாலும் ஆண்டவனின் அன்பும் அருளும் இல்லையெனில் உனக்கு அவைகளினல் யாது பயனுண்டாகும்? ஆண்டவன் பால் செலுத்தும் அன்பும் அவனுக்கே செய்யும் தொண்டும் தவிர மற்றவை மாயையுள் மாயையே. எல்லாம் மாயையேயாகும்.

இவ்வுலகை வெறுப்பதன்மூலம் பேரின்பவுலகை நோக்கிச் செல்வோம்; என்பதே பேரறிவாகும். ஆகவே, அழியும் செல்வங்களை நாடுவதும் அவைகளையே நம்புவதும் மாயையாகும். பட்டம் பதவிகளை விரும்பி அதன் உச்ச நிலையை யடைவதும் மாயையேயாகும். உடல் இச்சைகளை நாடிச்செல்வதும் மாயையே. இவற்றை விரும்பியதற்காகப் பின்பு மிகுதியாக ஒறுக்கப்படுகின்றோம். நல்வாழ்வைப்புறக்கணித்து நீண்டவாழ்வை விரும்புவதும் மாயையே.

நிலைத்த இன்பமுள்ள இடத்தை விரைந்து நாடாது விரைவில் மறையக்கூடிய ஒன்றில் உங்கள் மனத்தைச் செலுத்துவது மாயையே.

"கண்கள் பார்ப்பதுடன் அமையாது, காதுகளும் கேட்பதுடன் அமையாது" என்னும் பழமொழியை அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

கண்களுக்குத் தென்படும் பொருள்களின்மேலுள்ள இச்சைகளை உங்கள் மனத்திலிருந்து அகற்றக் கற்றுக்கொள்ளுங்கள். கண்களுக்குப் புலனாகாப் பொருளில் உங்கள் கவனத்தைச் செலுத்துங்கள். ஏனெனில், ஆசைகளைப் பின்பற்றிச் செல்பவர்கள் தங்கள் மனத்தை மாசுபடியச் செய்கின்றனர். ஆண்டவனின் அருளையும் இழக்கின்றனர்.

"தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்"—திருக்குறள்.

மதிப்புரை

—o—

மணங்கவர் மதுரை: ஆசிரியர்: வித்துவான் திரு. தி. கி. சுந்தர மூர்த்தி அவர்கள். விலை அணா 8. விலாசம்: திரு. தி. கி. சுந்தர மூர்த்தி அவர்கள், தமிழாசிரியர், உயர்நிலைப்பள்ளி, பசுமலை, (மதுரை மாவட்டம்.)

இப் புத்தகம் தன் பெயருக்கேற்ப யாவர்க்கும் மனங்கவர் ஊட்டும் நோக்குடன் மதுரையின் மாண்பினை வகுத்துரைப்பதாகும். ஸ்ரீ மீனாட்சி கோவிலின் தலைக்கோபுரவாயில் இதன் முகப்புப் படமாகத் திகழ்கிறது. ஆயிரம் அடிகள் கொண்ட அகவற்பாவால் ஐம்பது பக்க அளவான இச் சிறுபுத்தகம், அமைப்பும் அச்சும் அழகுற இலங்குகின்றது. மதுரைத் தியாகராசர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள், மதுரைத் திருவள்ளுவர் கழகச் செயலாளர் பண்டித மீ. கந்தசாமிப் புலவரவர்கள் முதலியோர் இதற்குச் சிறப்புப்பாயிரச்செய்யுள் அளித்துள்ளனர்.

நகரத்தின் தோற்றம் அமைப்பு காட்சி சிறப்பு என்பன முதலாக, தொன்று முதல் இன்று வரை வரலாற்று முறையில் இயன்ற அளவு தொகுத்த சில [illegible]2 தலைப்புக்கள் இதில் அடங்கியுள்ளன. அவற்றில் 'திருவள்ளுவர் கழகம்' என்ற தலைப்பு, மதுரை வடக்காடி வீதியில் அக் கழகம் தமிழ்வளர்ச்சி கருதி ஆற்றிவரும் செயல் முறையை யாவரும் அறிய எடுத்துரைக்கின்றது. இவ்வாறே ஏனையவும் அடிமுதல் முடிவுவரை படிப்பவரைப் பரவசமாக்கி, ஒருகாலே முழுதும் வாசித்து நிறுத்துமளவு வேட்கை விளைப்பனவாம். உரைநடைபோல் எல்லார்க்கும் விளங்கத் தெளிவும் இனிமையும் கொண்ட இச் செய்யுள் நடை மிக எளிமையுற்றும் காண்கிறது. செய்யுளுக்கு ஏலாத சிறு பிழைகள் சில இதில் போக்கின்றிப் புகுந்தனவும் உள. இத் தலயாத்திரையாளர்க்கு இது தக்கதொரு கைப்புத்தமாக உதவும் என்னலாம்.

ஆசிரியர்-திரு, நா. அப்பனையங்கார்.

---

* மதிப்புரைக்குப் புத்தகம் அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்பவேண்டும்.

1955-ஆம் ஆகஸ்ட்-மீ 12௳ (மன்மத-ஆம் ஆடி-மீ 27௳) கூடிய மதுரைத்தமிழ்ச் சங்கத்தின் காரியநிர்வாக ஸபையில் முடிவு செய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

1 மகா-௱-௱-ஸ்ரீ Sir. P. T. இராசன் அவர்கள்-(உப-அக்கிராசனாதிபதி) மதுரை.

2 „ N. R. கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் B.A., B.L., மதுரை.

3 „ P. ரெங்கசாமி நாயுடு அவர்கள், B.A.,B.L., அட்வகேட், மதுரை.

4 „ S. பார்த்தசாரதி நாயுடு அவர்கள், அட்வகேட், மதுரை.

5 „ V. ஷண்முகசுந்தரம் அவர்கள், M.A., B.L., மதுரை. (காரியதரிசி.)

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்

1. 1955ஆம்-ஆம் பிப்ரவரிமீ முதல் ஜூலைமீ வரையுள்ள மாதாந்தரக்கணக்குகளும் 1954—1955 ஆம் வருட வரவு செலவு கணக்கும் அங்கீகரிக்கப்பெற்றன.

2. 1955—1956-ஆம் ஆண்டுத்திய வரவு செலவு திட்டம் (Budget) அங்கீகரிக்கப்பட்டது.

3. சிலோன் கார்ட்டன் பிரிட்ஜ் Sri K. நடராஜன் அவர்களை அங்கத்தினராக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4. 1955 மார்ச்சு மாதம் நடந்தேறிய S. S. L. C. ஆங்கிலத்தமிழ்ப் பரீக்ஷகர்களுக்கு வூதியம் கொடுத்ததை அங்கீகரிக்கலாயிற்று.

5. 1955ஆம் செப்டம்பர் மாதம் 17௳ யன்று அங்கத்தினர்களின் மஹாசபை கூட்டலாமென்று தீர்மானிக்கப்பட்டது.

6. தமிழ்க்கழகத்தோடு (Tamil Academy) கூடிய தமிழ்ச்சங்கப் புனரமைப்பைப் பின்னால் நடக்கும் பொது அங்கத்தினர்களின் மஹாசபை ஆலோசனைக்கு விடுமாறு தீர்மானிக்கலாயிற்று.

7. ரூ 15000 அல்லது எவ்வளவு தொகை கொடுக்கக்கூடுமோ அவ்வளவையும் சர்க்கார் கடனுக்கு (State Loan) கொடுக்க அனுமதிக்கலாயிற்று.

12—8—55
மதுரை

(Sd.) P. T. இராசன்,
துணைத் தலைவர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்படும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றும்பாகம்	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
16.	ஸ்ரீ கிருஷ்ணசரித்திரவிமர்சம்	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கணூல் (5) இனியதுநாற்பது (உரை)	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	0	4	0
19.	தேவையுலா	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும் உரையும்	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	0	8	0
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
32.	மனீஷாபஞ்சகம்	0	8	0
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100) ...	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு...	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
67.	அமிர்தாஞ்ஜலி	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ...	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	0	10	0

1. சங்கத்தினின்று மாதம் ஒருமுறை அரிய பெரிய விஷயங்களைக் கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4-8-0. இதுவரை 50 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4—0—0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும். S. சிவஸ்வாமி, மானேஜர்.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by T. N Appan Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.